RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s1026

OPEN ACCESS

# ஜெயகாந்தன் குறும்புதின படைப்புகளில் அடித்தட்டு மக்கள்

சொ. தனலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# The Lower-Class People in the Short Stories of Jayakanthan

S. Dhanalakshmy [a, *]

[a] Department of Tamil, Chellammal Womens College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India.

* Corresponding Author: dhanamyun1982@gmail.com

Received: 15-09-2021
Revised: 11-06-2022
Accepted: 17-06-2022
Published: 12-08-2022

Check for updates

## ABSTRACT

The lifestyles of people who 'live' in society are seen as having inequalities. Underlying all these ups and downs is the division between the upper class and the lower class. Upper class people live life with abundant wealth. However, the lower classes live in abject poverty, unable to meet even their most basic needs. In particular, the economic situation has been in a state of scarcity among the lower class. As a result, lower class people have to fight for their lives to get their basic needs. In this article, the concept that the government has introduced many schemes for their economic growth but not all of them reach their full potential is explored.

**Keywords:** Power, Poverty, Boss, Social Change.

## முன்னுரை

மனித வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையான உணவு உடை, உறைவிடம் போன்றவற்றைப் பெற முடியாமல். விளிம்பில் அல்லது ஓரத்தில் வாழ்க்கை நடத்துபவர்களை விளிம்புநிலை மக்கள் என்று கூறுவர். விளிம்புநிலை என்பது வேறுசில சொற்களாலும் தமிழில் சுட்டப்படுகின்றது. அவை மையத்திலிருந்து விளக்கப்பட்டவள்கள், அடித்தட்டு மக்கள், ஓரத்து மக்கள் என்பதாகும். சமூக நடைமுறையில் இரண்டு நிலைப்பாடுகாள் காணப்படுகின்றன. ஒன்று ஆதிக்கம் செலுத்துதல், மற்றொன்று ஆதிக்கத்திற்கு உட்படுதல் என்பதாகும். ஆதிக்கம் செலுத்துபவர் மையப்பகுதியில் வாழ்பவராகவும், ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள் ஓரப் பகுதியில் வாழ்பவராகவும் இருக்கின்றனர். இந்த வகையில் ஜெயகாந்தனின் குறும்புதினங்களில் இக்கருத்தினைப் பொருத்திப்பார்க்கின்ற முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அடித்தள மக்கள் வரையறை

“ஆங்கிலத்தில் Subaltern என்று கூறப்படும் இலத்தின் மூலச்சொல்லுக்குத் தமிழில் ஆளப்படுகிற / கீழ்ப்பட்ட /அதிகரத்திற்குப்பட்ட என்பது பொருளாகும்' மேல் ஆதிக்கம் செலுத்தும் சாதி, வர்க்கம், குழுக்கள் முதலியவை மையப்பகுதியாகவும் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட சாதி, வர்க்கம், குழுக்கள் முதலியவை ஓரப்பகுதியாகவும் குறிப்பிடப்படுகின்றன (Panchangam, 2004).” விளிம்புநிலை என்ற இந்தச் சொல்லாட்சிக்குச் சுருக்கப்பட்ட ஆக்ஸ்போர்டு அகராதி தாழ்ந்தநிலை என்ற பொருளை வழங்குகிறது.

எனவே வர்க்கம், சாதி, வயது, பால், தொழில் இன்னும் வேறுசில வகையிலும் சமூகத்தில் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டவர்களைத் தான் விளிம்புநிலை மக்கள் என்று வரையறைப்படுத்துகிறார் (Ranajit Guha, 2005).

விளிம்புநிலை மக்கள் என்கிற சொல்லாக்கத்தில் சிறுபான்மை இனக் குழுவினர், பழங்குடியினர், நாடோடிகள், அலிகள், அகதிகள், பெருநகரச் சேரிவாசிகள் உட்படுகின்றனர் என்றும் இவர்கள் எப்பொழுதும் பெருந்திரள் சமூகத்தோடு ஒத்துப்போகாமல் தனித்தே வாழ்கின்றனர் என்றும் வரையறை செய்கின்றார் (Chella Perumal, 2003).

ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் சாதி, செய்யும் தொழில் அரசியல் ஆதிக்கம், பொருளாதார நிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்திலும் தாழ்ந்த நிலையில் இருக்கும் மக்களே அடித்தள மக்கள் என்று வரையறை தருகின்றார் (Siva Subramaniam, 2003).

நிலையற்ற வேலையும் பகுதிநேரக் கூலிவேலையும் வேலையின்மையும் கொண்டவர்கள் விளிம்புநிலை மக்களாவர். மேலும் புறச்சாதிகள் தீண்டத்தகாதவர்கள், நாடோடிகள், நல்ல ஆடையின்றி, உணவின்றி ஏழ்மையில் வாழும் மக்கள் ஆகியோர் விளிம்பு நிலையினர் என்று கூறுகிறார் (Bakthavachala Barathi, 2003).

சமூக வாழ்விலிருந்து விலக்கப்பட்டும், ஓரத்தில் ஒதுக்கப்பட்டும், அதற்கு மேலும் சமூகம் என கட்டமைப்பின் விளிம்பில் தொங்கிக் கொண்டிருப்பவர்களை விளிம்புநிலை மக்கள் என்று வரையறை செய்கிறார் (ஞானி).

விளிம்புநிலை மக்கள் வரிசையில் நிலம், பணம், சாதி, அதிகாரம் அனைத்தையும் விட ஆதிக்கம், மேட்டிமை, மேலாண்மை ஆகிய உரிமைகளுடன் மையத்தில் இருப்பவர்களால் புறந்தள்ளப்பட்ட மறுத்து ஒதுக்கப்பட்ட, காயப்படுத்தப்பட்ட பழங்குடியினரின் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள், அரவாணிகள், விபச்சாரத்த தொழிலில் தள்ளப்பட்ட பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள் எனப் பரந்துபட்ட பொருள் வரையறையின் கீழ் வருவோர் விளிம்புநிலையினர் என்று வரையறுகிறார் (Andhoni Kurusu, 2003).

பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்படும் ஆண், பெண் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள், பண்பாட்டு ஒடுக்கு முறைக்கு உட்படும் தலித்துகள், பாலியல் ஒடுக்குமுறைக்கு உட்படும் பெண்கள் ஆகியோர் அடித்தள மக்களாவர் என்கிறார் (Muthaiya, 1998).

இவ்வாறு அடித்தள மக்கள் மேல்தட்டு வர்க்கத்தினரால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை மேற்கண்ட வரையறைகள் சுட்டுகின்றன. எனவே இதனை எதிர்த்துப் போராடும் நோக்கத்தில் தான் விளிம்புநிலை ஆய்வு தோற்றம் பெற்றது. இவ்வாய்வு அடித்தட்டு மக்களின் இன்னல்களை வாழ்க்கைப் பாடுகள் போன்றவை பதிவு செய்து ஆய்வுத் துறையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

## அடித்தள மக்கள் வரலாறு

இதுவரை எழுதப்பட்ட வரலாறுகள் அனைத்துமே நிலையற்ற மையங்களின் வரலாறுகளாகவே இருந்தன. வரலாற்று ஆசிரியர்கள் அடித்தள மக்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மேட்டிமையோரை மையமாகக் கொண்டே நிகழ்வுகளை எழுதினர். குறிப்பாக மேல்சாதியினரைப் புகழ்ந்தெழுதுதல் மற்றும் அவர்கள் புரிந்த சாதனைகள், பட்ட வேதனைகள், பேசிய பேச்சுகலை எழுதிய எழுத்துக்கள் போன்றவற்றப் பேசியதே தவிர உழைப்பாளி வர்க்கத்தினரின் வாழ்க்கை உண்மைகளை அந்த "மேட்டுக்குடி வரலாறு பேசியதில்லை (Sundarraj manikkam, 1997)." இப்படிப்பட்ட மனநிலை கொண்டவரிடமிருந்து விலகி அடித்தள மக்கள் வரலாறு அல்லது விளிம்புநிலை மக்கள் வரலாறு வரவேண்டும் என்று எதிர்பார்ப்புகள் இருந்தன.

"ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் வரலாற்றின் தலையாய இடம்பெறும் மேட்டிமையோர் நிகழ்த்திய சாதனைகளைப் பற்றியதாக இல்லாமல், அச்சமுதாயத்தில் வாழ்ந்த அடித்தள மக்களின் பங்களிப்பு அச்சாதனைகளால் மறைந்துள்ளதை வெளிக்கொண்டு வருவது அவசியமான ஒன்றாகும்.

அதனுடன் அடித்தள மக்களின் நியாயமான விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் அவற்றை அடையும் முயற்சிகள் அவர்கள் எதிர்கொண்ட இடையூறுகள், நிகழ்த்திய போராட்டங்கள் அவர்களது வழிபாட்டு மற்றும் ஒழுக்க நெறிகளில் மேட்டிமையோர் ஏற்படுத்திய தன்னிச்சையான சுயநல நோக்குடைய குறிக்கீடுகள் ஆகியன குறித்த உண்மைகளைக் நோக்கமாகும் என்கிறார் (Siva Subramaniam, 2003).

விளிம்புநிலை மக்கள் அல்லது அடித்தள மக்கள் என்று சொல்லக் கூடிய சமூக - பொருளாதார நிலையில் பின்னுக்குத் தன்னபட்ட மக்கள் குறித்த விவாதங்கள் 1970 களின் பிற்பகுதியில் தீவிரம் அடைந்து 1980 களில் நவீன காலத்தில் இந்திய வரலாற்றை எழுதுதல் என்னும் கருத்தோட்டத்தில் சிந்தனையாளர்களிடம் தோன்றிய மாற்று விவாதமே விளிம்புநிலை ஆய்வாகத் தோற்றம் பெற்றது. இந்த வரலாற்றிஞரான "ரணஜித்குகா" என்பவர் தான் விளிம்புநிலை ஆய்வு வரலாறு தோற்றம் பெறக் காரணமாக இருந்தவர் ஆவர். இவர் இங்கிலாந்து சசெக்ஸ் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இன்றைய நவீன காலத்தில் இந்தியாவின் வரலாற்றை மீண்டும் எழுதுதல் என்னும் நிலையில் ஒரு மாற்றுச் சிந்தனைய எடுத்துக் கூறினார். அதன் பிறகு அவரும் அவருடைய சிந்தனைக் குழுவினரும் ஒன்று சேர்ந்து தங்கள் எழுத்துக்களைச் "சபால்ட்ரன் ஸ்டடிஸ் ரைட்டிங்ஸ் ஆன் இண்டியன் ஹிஸ்டரி அண்ட் சொசைட்டி (I Subaltern Studies "writing on Indian history and docitg) என்னும் தலைப்பில் 1982- இல் நூலாக வெளிட்டனர் தொடர்ந்து இத்தலைப்பிலேயே நூல்களும் வெளியிடப்பட்டதால் இது ஒரு கருதியக்கமாக தனித்த சிந்தனை மரமாக உலகம் முழுவதும் அதிர்வினை ஏற்படுத்தத் தொடங்கியது. இதுநாள் வரை காலங்காலமாக இருந்துவந்த வரலாற்றை எழுதுதல் என்கிற போக்கு மாற்றம் பெற்று அடித்தளத்திலிருந்து வரலாறு எழுதுதல் என்கிற அமைப்பு முறை உருவாகியது. இது உலக நாடுகள் மட்டுமின்றி இந்தியாவிலும் அதுவும் குறிப்பாக தமிழகத்திலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழகத்தில் அடித்தட்டு மக்கள் வரலாறு

“தமிழ்ச் சமூக நினைவிலிருந்து. அறவே மறைக்கப்பட்டுவிட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் அறிவார்ந்த பணிகளை தேடுவது தொடர் நடவடிக்கையாக இருந்தால் ஒழிய வளமான அறிவு மரபைக் கண்டெடுக்க முடியாது. ஒடுக்கபட்ட மக்கள் குழுவினரின் அறிவுசார்ந்த அடையாளங்கள் அழிக்கப்பட்டு ஆதாரமில்லாமல் ஆக்கப்பட்டுவிட்டன என்பதைத் தான் ஆதாரங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அடிநிலை ஆய்வுகள் பெருகிவிட்ட இக்காலத்திலும் கூட இவைகள் தேடப்படாமலும் ஆய்வு செய்யப்படாமலும் இருக்கின்றன என்ற கூற்று ஒரு பக்கம் உண்மையாக இருந்தாலும் அதனைத் தேடும் முயற்சியில் இன்றைய ஆய்வறிஞர்கள் செயல்பட்டு வருகின்றனர். தீவிரமான சமூக மாற்றங்கள் நிகழ்ந்த ஒரு காலகட்டத்தில் சமூகத்தின் கடைகோடியில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகத் தமிழகத்தில் அயோத்திதாசர். ராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசன், எம்.சி. ராஜா, பெரியசாமிப் புலவர், பண்டிட் முனுசாமி, ஜான் ரெத்தினம், முத்துவீரப் பாவலர், கோ. சொப்பனேஸ்வரி அம்மாள், சகஜானந்தர், வைகுண்ட சாமி நாராயணகுரு, பெரியார் போன்றோரின் பங்கு குறிப்பிடதக்க ஒன்றாகும்” (Panchangam, 2006).

இந்தவகையில் அடித்தள மக்கள் பற்றிய பதிவுகள் எழுத்தாளர்கள் மனதிலும் உள்வாங்கபட்டு அவர்கள் படைப்புகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளன என்கிற முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூகத்தில் கடைநிலையில் உள்ள தீண்டத்தகாத மக்களாக கருதப்படும் விளிம்புநிலை மக்கள் பலவகையான துன்பங்களை அனுபவிக்கின்றனர் இவற்றை ஜெயகாந்தன் குறும்புதினங்கள் நன்றாக பதிவு செய்துள்ளன என்பதை விளக்கமுடிகிறது. கீழ்கண்ட உட்தலைப்புகளின் கீழ் இக்கட்டுரை விளக்கப்படுகிறது.

1. கொலைகாரர்கள்
2. திருடர்கள்
3. பிச்சைகாரர்கள்
4. கூலித்தொழிலாளர்கள்

5. ரிக்கூஷாக்காரர்கள்

## கொலைகாரர்கள்

உலகில் வாழும் எந்தவொரு மனிதனும் கொலையை நிகழ்த்துவதில்லை, அது சூழ்நிலையின் காரணமாக நிகழ்தேறி விடுகின்றது. மனிதமனங்களை கட்டுபடுத்தாத நிலையில் அவர்கள் கொலைக் குற்றவாளியாக மாறுகின்றனர். இப்படிப்பட்ட கொலை குற்றவாளிகளையும் ஜெயகாந்தன் தன்னுடைய படைப்பில் சுட்டிக் காட்டுகிறார்.

“கை விலங்கு" என்ற குறும்புதினத்தில் சாமுண்டியின் குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான ஓர் நிகழ்வு அவனைக் கொலைக் குற்றவாளியாக மற்றுகிறது. அச்சம்பவத்தை நினைத்து வருந்தும் நிலையில், "மாணிக்கம் நீ என் புள்ளை மாதிரி, உன்கிட்டே சொல்றதுக்கு என்ன? நானு வேனுமுன்னு தான் இப்படியெல்லாம் பண்ணி அடி வாங்கறேன். என்னைக்காவது ஒருநாள் நான் எவனையாவது கொன்னாலும் கொன்னு போடுவேன். எனக்கு தூக்குத் தண்டனை கொடுங்கனு அந்த ஜட்ஜை கெஞ்சு கெஞ்சுனு கெஞ்சினேன். “அந்த மனுஷன் என் மேலே கருணை காட்டி எனக்கு ஏழு வருஷம்ன்னு தீர்ப்புச் சொன்னார்' என்று உள்ளுர அழுகிறான் (Jayakanthan, 2001).

தன்னுடைய மனைவி செய்த தீங்கினைப் பொருத்துக் கொள்ள முடியாமல் கொலைக் குற்றவாளியாகச் சிறைவாசம் புகுத்துள்ளான். மேலும் 'இல்லாதவர்கள்' என்ற குறும் புதினத்தில் டோனி என்ற கதாப்பாத்திரம் கொலைக் குற்றவாளியாக அமைந்துள்ளது. பொன்னகர வாசிகளிடம் பொல்லாதவன் என்று பெயர் எடுத்திருந்தால் தான் செய்யாத கொலைக் குற்றத்திற்காக மறைந்து வாழ்கின்ற சூழல் அவனுக்கு ஏற்படுகிறது. "நான் தான் சொல்லறேனே சாமி, காலையில் இருந்து, சுயங்காலம் வரைக்கும் சாராயத்தைக் குடி குடின்னு குடிச்சிருந்தேன். அந்தப் போதை வெறியிலேதான் எல்லாம் நடந்துடுத்து ஆனால் சாமி எவ்வளவு போதை வந்தாலும் எனக்கு நினைப்பு தப்பா பூடாது. நான் ஜகா வாங்கினது, கத்தியாலே. குத்தினது ரவுடித் தனம் பண்ணினது. கொடிக்கம்பத்தில் இருந்து கொடியை அறுத்தது. எல்லாம் உண்மைதான் சாமி குத்தினேன்” (Jayakanthan, 2001) இவ்வாறாக சமூகத்தில் பொல்லாதவன் என்று பெயர் வாங்கியவனை எப்பொழுறும் இவ்வுலகம் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறது என்பதை இல்லாதவர்கள் குறும் புதினம் குறிப்பிடுகிறது. இவ்வாறாகக் கொலைக் குற்றவாளியாகக் கருதப்படுகிற விளிம்புநிலை மக்கள் ஒருசில நேரங்களில் யூகத்தின் அடிப்படையிலேயே கைது செய்யப்படுகின்றனர் என்பதை ஜெயகாந்தன். சுட்டி காட்டுகிறார்.

## திருடர்கள்

உலகின் மனிதர்கள் பிறக்கும் போது நல்லவர்களாகவே பிறக்கின்றனர், அவர்கள் வளரும் போது தான் அவரவர் வாழ்க்கை முறைக்கேற்ப நல்லவர்களாக இருப்பதும் திருடர்களாக மாறுவதும் அமைகின்றன. இல்லமை என்கிற சூழல் உருவாகும்போது திருடர்களாக மாறுகின்றனர். இப்படிப்பட்ட ஓர் கதைமாந்தர் ஜெயகாந்தன் குறும்புத்னங்களில் தென்படுகிறது. இல்லாதவர்கள் என்ற குறும்புதினம் தலைப்பிற்குப் பொருந்துமாகவே உள்ளது. அவர்கள் இல்லாதவர்கள்தான் அதனாலேயே அவர்கள் பொல்லாதவர்களாக. மாறிவிடுகின்றனர். அதாவது திருடர்களாக மாறிவிடுகின்றனர். டோனியும் அவ்வாறே அனைவராலும் அடையாளம் காணப்படுகிறான். திருடனாக இருக்கின்ற டோனியைத் திருத்த வேண்டும், என்று முயற்சி செய்யும் தாத்தா உனக்கு ஒரு வேலை தருகிறேன். மேலும் போலீஸ் உன்னை கொலை வழக்கில் பிடிச்சாலும்: உனக்காக வக்கீல் வைத்து வாதாடி வெளியே கொண்டு வருகிறேன், அப்பொழுதாவது நீ திருத்தி வாழ்வாயா என்று கேட்கும் நிலையில் டோனி மறுப்பு தெரிவிக்கிறான். “சாமி நீங்க செஞ்ச உதவியை நான் என்னைக்கும் மறக்கமாட்டேன். திருட வந்தது. எவ்வளவு பெரிய பாவம் ஆனால் உங்களோடு பழகினது, எவ்வளவு பெரிய புண்ணியம்,' இங்க இருந்து நான் ஒரு பொருளையும் எடுத்துக் கொண்டு போகலை, உங்கக்கிட்டே, சீட்டாட்டத்தில் ஜெயித்த பணம் நானூத்திமுப்பத்து, மூனு ரூபாயைத் தவிர அதைக்கூட வெச்சிட்டுப் போயிடலாம்னு யோசிச்சேன். என் நிலைமை இப்ப சரியில்லாம இருக்கு. உங்க அனுமதியோட. அந்த பணத்தை எடுத்துகீட்டு நான்

போறேன். நான் போயிட்டு வரேன் சாமி," என்று குறிப்பீட்டு இருப்பதை பார்த்து தாத்தா வியப்பில் ஆழ்கிறார், திருடனாக இருந்தாலும் அவனிடம் நல்ல குணங்கள் அதிகமாகத் தென்படுகின்றன (Jayakanthan, 2001). என்பது அவன் எழுதிய கடிதத்தின் மூலம் தெரிய வருகிறது.

மேலும்' "யாருக்காக அழுதான்" குறும்புதினத்தில் அப்பாவியான சோசப்பை திருடன் பட்டம் கட்டிப்பார்க்கிறது இச்சமூகம். அவனின் திருட்டு முடிவு. அதற்கு ஒரு காரணமாக அமைகின்றது. மேலும் அவன் முதலாளியின் மீது வைத்துள்ள விசுவாசமும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. வடநாட்டில் இருந்து வந்த ஓர் ஆசாமி ஹோட்டலில் ரூம் எடுத்துத் தங்குகிறாள். அந்த ஹோட்டலில் பணிபுரியும் சோசப்புதான் முதலாளியின் உத்தரவின் படி அந்த ஆசாமியை ரூமூக்கு அழைத்துச் செல்கிறான். அதனாலே அவன் மீது திருட்டுப்பழி வந்து சேர்கிறது. ஆசாமியின் பர்ஸ் காணமல் போனதற்கு சோசப்பை அவன் காரணம் காட்டுகிறான். "அரே முழிக்கிறான் கொலை நடக்கும் பார்ஸைக் குடுத்திடு என்று பல்லை கடித்தவாறு புறங்கையில் லுங்கி சோசப்பின் முகத்தில் அறைந்தார் சேட். சோசப்பு நான்கு அடிகளுக்கு அப்பால் அறை மூலையில் சுருண்டு விழுந்தான். பிறகு சாவதானமாய் எழுத்து அமைதியாக சேட் ஜியின் முகத்தை பார்த்து நான் எடுக்கல்லே ஆண்டவனே" (Jayakanthan, 2001) என்றான், "இருப்பினும் சோசப்பை யாரும் நம்பவில்லை. அதன்பிறகு பர்ஸ் கிடைத்தவுடன் வடநாட்டு ஆசாமி வெட்கித் தலைகுனிகிறான். என்னை மன்னித்து விடு என்று கூறுகிறான். ஆனால் சோசப்பு அழுகை நின்ற பாடில்லை. அவன் அழுகைக்கு யார் காரணம் என்று ஆவனுக்கு மட்டுமே தெரியும். பணத்தின் மீது கொண்ட ஆசையால் சோசப்பின் முதலாளி திருடி இருந்தாலும் அதன் பழி தொழிலாளியை சேர்கிறது. விளிம்புநிலை மக்கள் நேர்மையாக வாழ்ந்தாலும் விளிம்பு நிலையினர் என்பதாலேயே இந்தச் சமூகம் எப்படி அவர்களை இழிவாகக் கருதுகிறது என்பதைக் கதைச் சொல்லி அழாகப் புனைந்து காட்டுகிறார்.

## பிச்சைக்காரர்கள்

உலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் உழைத்து வாழ வேண்டும் என்று முடிவு செய்து வாழ்கின்றனர். ஆனால் ஒரு சில மனிதர்களுக்கு மட்டும் பிச்சையெடுத்தாவது வாழ்க்கையை வாழ வேண்டும் என்கிற அவலநிலை உருவாகிறது. அதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டு தன் குடும்பத்தை பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றனர்.

"பிரளயம்" என்ற குறும்புதினத்தில் கண்பார்வை அற்ற கோகிலா தன்னுடைய கணவனால் விரட்டியடிக்கப்பட்ட நிலையில் பெற்ற பிள்ளைகளை வைத்துக் கொண்டு வாழ்கை நடத்த வழியின்றி பிச்சையெடுக்கும் தொழிலில் ஈடுபடுகிறாள். அம்மாசிக் கிழவன் முன்னாள் இராணுவ வீரன். அவன் வசிக்கூடிய சேரிப்பகுதியில் உள்ள அனைவரின் நலனிலும் பங்கு கொள்பவன்" அப்படித்தான் ஒருநாள் கோகிலாவை பார்த்து, "இன்னா கோகிலா இன்னக்கிக் கூடவா அந்தப் பையன் உன்னைப் பிச்சையெடுக்க வெரட்டினான் ஐயோ இன்னகின்னா மட்டும் இன்னவாம்? என் தலை எழுத்துக்கு யார் இன்னா பண்றது. என்று கையில் இருந்த சில்லறையைக் குலுக்கியவாறு சலிப்புடன் சொன்னாள்" (Jayakanthan, 2001).

என்ற வரிகள் மூலம் கோகிலா பார்வையற்றவள், அவளை வீட்டுக்குள்ளே வைத்துப் பாதுகாக்காமல், அவளது ஊனத்தைப் பணமாக்கிப் பிழைக்கிறான் கணவன் மாணிக்கம் என்று அறிந்து கொள்ள முடிகிறது, சமூசத்தில் மாணிக்கம் போன்ற ஆண்கள் மனைவியின் உழைப்பில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். என்ற கொடுமையைச் சுட்டிக் காட்டுகிறர்,

## பிச்சைகாரர்கள் வசிக்கும் இடம்

"பிச்சைகாரர்களின் இருப்பிடம் பிரளயம்" என்ற குறும்புதினத்தில் ஜெயகாந்தனால் சுட்டிகாட்டப்பட்டுள்ளது. "உயர்ந்து மேடிட்ட கரை போல் அமைந்த பஸ்கள் செல்லும் அந்தப் பெரிய சாலையில் பக்கத்துச் சரிவில் பள்ளத்தில் கிடந்தது, அந்த எளியசேரி. சரிவின் ஓரத்தில் நாற்றம் பிடித்த கழிவுநீர்க் கால்வாய் ஓடிக் கொண்டிருத்தது. சகதியாய்க் குழப்பிய கழிவுக்கும் மக்கியமண்டிய

குப்பைக்கும், புழுத்து நாறும் அழுகலுக்கும் போக்கிடமாய் அமைந்த அந்தப் பள்ளத்தில் உயிருள்ள மனிதக்கும்பலும் வசிக்கின்றன," (Jayakanthan, 2001) என்ற வரிகளில் அடிதட்டு மக்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் தங்கள் உயிரைப் பிடித்துக் கொண்டு காலம் கழிக்கின்றனர். என்பதைச் சொல்லி விடுகிறார்.

## கூலித்தொழிலாளர்கள்

மனித குலத்தின் ஆக்கச் சக்தியாக விளங்குபவர்கள் தொழிலாளர்கள். தொழிலாளியின் வாழ்க்கையில் இயந்திரமயமாகும் தொழில்கள் அவனுடைய மனித சக்திக்குச் சவாலிடுகின்றன. ஆட்குறைப்பும், கூலிப் பிரச்சனைகளும் அவர்களுடைய வாழ்க்கைக்குத் தடையாக நிற்கின்றன. என்பதனை "பாவம் இவளொரு பாப்பாத்தி" என்ற குறும் புதினத்தின் வழி விளக்குகிறார் ஆசிரியர்

விவசாயிகளுக்கு வேண்டிய நியாயமான விலை கரும்பிற்குக் கிடைப்பதில்லை. மேலும் ஆலைத் தொழிலாளர்களுக்கு முறையாக கொடுக்க வேண்டிய ஊதியமும் வழங்கபடவில்லை என்று போராட்டம் நடத்துகின்றனர். தொழிலாளர் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்பணித்து கொண்ட தோழர் துரைசிங்கம் பத்திரிக்கைக் கூடையும் நூலகமும் நிறுவுகிறார். இவருடன் பரந்தாமனும் இணைந்து செயல்படுகின்றான். ஆலைத்தொழிலாளர். சங்கம் அரிவாள்- சுத்தியல் தாங்கிய செங்கொடியோடு தோற்றம் பெறுகிறது. இருப்பினும் -பல்வேறு பிரச்சனைக்களுக்கிடையே பரந்தாமன் கொல்லபடுகிறான், முதலாளிகள் உழைப்பாளிகளின் உழைப்பை அடிமட்டத்திலிருந்து சுரண்டி இலாபம் பார்க்கின்றனர். எனவே இந்தக் கொடுமைகளை எதிர்க்க ஆனந்தன் தலைமையில் ஒரு குழு சிறப்பாகச் செயல்படுகிறது. இவை "எங்கெங்கு காணினும்" குறும் புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தில் 60 சதவீத விவசாயின் அதாவது கூலி உழைப்பு விவசாயிகள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள். உடலழைப்பு என்ற ஒரே மூலதனத்தை வைத்துக் கொண்டு ஊர் ஊராய்த் திரிபவர்கள், கட்டடம் கட்டுகிற, கல்லுடைக்கிற காடுகளை அழிக்கிற தொழிலாளிகள் நாடு முழுவதையும் பிணைத்துக் கட்டுகிற சாலைகளைப் போடுகிற, பாலங்களை கட்டுகிற மக்கள்," (Jayakanthan, 2001) இப்படிப்பட்ட தொழிலாளர்களை முன்னேற்ற பணியில் இருந்தபடியே மறைமுக ஆதரவு தரவேண்டும் என்று ஆனந்தன் கேட்டுக் கொண்டான். இறுதியில் அது நூறுபேர் இயக்கமாக மாறுகிறது என்று ஜெயகாந்தன குறிப்பிடுகிறார்.

## ரிக்ஷாக்காரர்கள்:

மேல்த்தட்டுவர்க்கத்தினர் அவரவரின் பொருளாதார வசதிக்கேற்ப வாழ்க்கையை வாழத் துவங்கி விடுகின்றனர். ஆனால் விளிம்பு நிலை மக்களுக்கு அவ்வாறாக வாழ்க்கைமுறை அமையவில்லை. கடினமாக உழைத்தால் மட்டுமே ஊதியம் என்கிற நிலை உள்ளது. எனவே தனக்கு -தெரிந்த தொழிலில் ஈடுபட்டு வாழ்வைக் கழிக்கின்றனர்.

சினிமாவுக்கு போன சித்தாள் என்ற குறும்புதினத்தில் ரிக்ஷாக்காரர்களின் வாழ்க்கை பதிவுச் செய்யப்படுகிறது. வருவாய்க்காக நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலை செல்வமுத்துவுக்கு ஏற்படுகிறது அவனுடைய உழைப்பினால் தன் மனைவியை இன்பமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஆசையினால் கூடுதலாக உழைக்கிறான். ஆனால் செல்லமுத்துவின் மனைவியான கம்சலைக்கு, வாத்தியார் மீது கொண்ட காதல் மட்டும் குறைந்தபாடில்லை. சிந்தனை முழுவதும் சினிமாவில் பார்த்த வாத்தியார் பற்றியதாகவே இருக்கிறது.

இருப்பினும் அவளுக்கு வாத்தியார் மீது கொண்ட காதல் மட்டும் குறையவில்லை. சினிமாவில் கத்திக்குத்து வாங்கி மயங்கிய நிலையில் இருக்கும் தலைவரைப் பார்த்து புத்திப் பேதலித்து விடுகிறது. இவளின் நிலையைப் பார்த்து செல்லமுத்து வருத்தம் அடைகிறான். "ஐயோ கவுளே. கம்சலை! இது இன்னா கோலம் ஒடம்பிலே துணியே இல்லாம, சினிமா போஸ்டருக்களை செவுத்தாலேருந்து கிழிச்சி பொடவ மாதிரி சுத்திக்கினு மெலெல்லாம் ஒரே மண்ணும் புயதியும். பாட்டுப் பாடிக்கினு கத்தி

ஆடறாளே" என்று வருத்தபடுகிற காட்சி, அங்கு கூடியுள்ளோரின் மனதில் குதூகலத்தை ஏற்படுத்துகிறது என்கிறார் ஆசிரியர், செல்லமுத்து அனைவரையும் அகற்றிவிட்டு கம்சலையை அவனுடன் அழைத்து வருகிறான் (Jayakanthan, 2001). இந்த குறும்புதினம் மூலம் ஆதிக்கச் சக்திகளால் அடித்தள மங்களின் ஏழை எளிய உள்ளம் எவ்வாறு ஏமாற்றப்படுகிறது என்பதையும் அந்த ஏமாற்றம் கணவன் மனைவி உறவில் வெளிப்படும் மேன்மையான பண்பினை காட்சிபடுத்துகிறார்.

## முடிவுரை

சமுதாயத்தில் அடித்தள மக்களாக இடம்பெறும் கொலைகாரர்கள், திருடர்கள். பிச்சைகாரர்கள், கூலிதொழிலாளர்கள், ரிக்கூஷாக்காரர்கள் ஆகியோரின் வாழ்க்கையை ஜெயகாந்தன் சித்தரிக்கும் பாங்கு சான்றுகளோடு ஆராய்ந்து அறியபட்டது, ஜெயக்காந்தனின் இத்தகைய அடித்தள மக்களின் வாழ்க்கைச் சித்தரிப்பு அவர்கள் மேல் பரிதாபத்தையும். இரக்கத்தையும் வேண்டி நிற்கவில்லை. மாறாக அவர்களின் வாழ்க்கை, உன்னதமான பண்புகளையும், மேன்மையான மதிப்பீடுகளையும் கொண்டு மற்ற மேல்தட்டு மற்றும் நடுத்தர வர்கத்து மனிதர்களை விட மிக உயிரோட்டமாகத் துடிப்புடன் ஓடிக் கொண்டிருக்கின்றது என்பதைத் தான் அவருடைய படைப்புகளின் வழி அறியப்படுகிறது.

## References


Andhoni Kurusu, A., (2003) Dalithiya Karuthiyal, Sri Senbagaa pathippagam, Chennai, India.

Bakthavachala Barathi, C., (2003) Panpattu Manitaviyal, Revised Edition, Meyyappan Patippakam, Chitamparam, India.

Chella Perumal, A, (2003) Vallinam Velieadu, (Kalantithazh), Chennai, India.

Jayakanthan, (2001) Jayakanthan Kurumputinam Munru Thoguthigal, First Edition, Meenachi Patippakkam, Madurai, India.

Muthaiya, E., (1998) Vilimpunilai Ayvukalum Tamil Kathaiyatalkalum, First Edition, Nira Prigai Veliyeadu, Chennai, India.

Panchangam, K., (2004) Talittukal Penkal Thamizhyarkal, First Edition, Vallinam Velieadu, Puducherry, India.

Panchangam, K., (2006) Punaivukalum Unmaikalum, First Edition, Kavya Patippakam, Chennai, India.

Ranajit Guha, (2005) Subaltern studies writings on South Asian History and societ South Asian History and society Oxford University press. Delhi, India.

Siva Subramaniam, A., (2003) vallinam velieadu, (kalantithazh), Chennai, India.

Sundarraj manikkam, (1997) Atittala Makkal Varalaru, First Edition, Kalattin Kattalai, Madurai kamarajar university, Madurai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


### About the License:


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License